# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, நவெம்பர் மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 3/2005

### இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றத்தைக் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்

"இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கதுக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றத்தின்" தற்போதைய உறுப்பினராகவுள்ள அல்லது சொல்லப்பட்ட மன்றத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் அனுமதிக்கப்படுபவர்களாகவுள்ள அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருத்தல் வேண்டும் ; அத்துடன் இலங்கை புற்றுநோய் ஆராய்ச்சி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் திருத்தவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையில் தொழில்புரியும் புற்றுநோய் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களிடமிருந்து புற்றுநோயியல் மீதான தொழில் நெறிமுறையில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளுதலும் கூட்டுத்தாபனத்தின் முகாமைச் சபையின் வழிகாட்டலின் கீழும் அவதானிப்புகளின் கீழும் அத்தகைய ஆராய்ச்சிகளுக்கு நிதியளித்தல் ;

(ஆ) ஆராய்ச்சிகளைக் கொண்டு நடாத்துவதற்காக இலங்கையில் புற்றுநோய் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு அல்லது ஒழுங்கமைப்புகளுக்கு நிதி உதவி வழங்குதல் ; அத்துடன்

(இ) பண உதவி தேவைப்படும் புற்றுநோய் பீடிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்குதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக, தவிசாளரையும் மருத்துவத்தில் அல்லது அறிவியலில் தகைமைகளும் அனுபவமும் கொண்ட கூட்டுத்தாபனத்தின் நான்கு உறுப்பினர்களுக்குக் குறையாதோரையும் கொண்ட முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :-

(அ) முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒருமுறையில், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிதிகளைப் பயன்படுத்தல் ;

(ஆ) முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் வங்கிக் கணக்குகளைத் திறத்தல், பேணுதல் அத்துடன் மூடுதல்;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதல் அவர்களை விலக்குதல் ; அத்துடன்

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவான அல்லது உசிதமான வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஏதேனும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அல்லது ஒரு விசேட பொதுக் கூட்டத்தில் ஆக்குவது கூட்டுத்தாபனத்துக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும் :-

(அ) பதவி தாங்குநர்களின் தேர்தலும், அவர்களின் பதவிக் காலமும், அத்தகைய உறுப்பினர்கள் பதவிவிலகலும் அல்லது பதவியை வறிதாக்கலும் அவர்களது தத்துவங்களும் கடமைகளும் ;

(ஆ) பதவி தாங்குநர்கள் அல்லாத முகாமைச்சபையின் உறுப்பினர்களின் தேர்தலும் பதவிக்காலமும் மற்றும் முகாமைச்சபையின் தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமையும் அதனது நிதியத்தின் கட்டுக்காப்பும் அதனது கணக்குகளை பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(ஈ) முகாமைச் சபையின் ஏதேனும் கூட்டங்களில் பின்பற்றப் படவேண்டிய நடைமுறைகளும் அதற்கான கூட்டநடப் பெண் மற்றும் அதில் கொண்டு நடாத்தப்படும் அலுவல் களும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்டவாறாக அதே முறையிலும் அது போன்ற கூட்டத்திலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**7**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபன மானது, கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது மரணசாதனக் கையளிப்பு அல்லது வேறுவகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறுவதற்கும், வைத்திருப்பதற்கும் இயலுமானதாதலும் ஆற்றலுடையதுமாத லும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும் கூட்டுத்தா பனத்தினால், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தா பனத்தின் விதிகளுக்கமைவாகவும், அவற்றை விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு, குத்தகைக்குக் கொடுப்பதற்கு, கொடுத்து மாற்று வதற்கு அல்லது வேறுவகையாக அதனைக் கையுதிர்ப்பதற்கான பூரண தத்துவத்துடன், வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் சார்பில் கொடை, மரணசாதனக் கையளிப்பு, நக்கொடை, ஒப்பப்பண உதவுதொகை அல்லது மானியங்கள் மூலம் இதற்கு முன்னர் பெறப்பட்ட

அல்லது இனிமேல் பெறப்படும் எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது பல வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்தத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் பணத்தொகைகள் யாவும் நிதியதிலிருந்து கொடுக்கப்படுதல் வேண்டும்.

செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல்.

**9.** (1) ஏதேனும் நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்தினால் அல்லது கூட்டுத்தாபனத்திற்கெதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கு அல்லது துடர்ச்சியில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவு கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் வழக்கு அல்லது துடர்ச்சியில் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் கூட்டுத்தாபன நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக ; அத்தகைய ஆளினால் நன்னோக்குடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கு அல்லது துடர்ச்சியில் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரினால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள், நீதிமன்றம் அத்தகைய செயல் அல்லது செய்யாமை நன்னோக்குடன் செய்யப்பட்டதெனக் கொண்டால், அத்தகைய செலவுகள் அத்தகைய வழக்கு அல்லது துடர்ச்சியில் அறவிடப்பட்டாலொழிய கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் சகல வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி முறையாக கணக்குகள் வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைச் சபையினால் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதமொன்றைக் கொண்டவராகவுள்ள தனியான ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய கூட்டுத்தாபனத்தின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர எச்சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் தமது கையொப்பங்களை இடுதல் வேண்டும். இவ்வாறு கையொப்பமிடுவதானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், சகல கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருக்குமாயின் அவ்வாதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் அதன் விதிகள் மூலம் ஏதேனும் வருவாயை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதனைத் தடைசெய்யும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு ஏதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் கலைப்பின் மீது அல்லது கலைப்பின் முன்னர் முகாமைச் சபையால் தீர்மானிக்கப்படலாம்.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியற் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதிப்பதாதலோவாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்